IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
O.S.No. 176 /2012
Deposition of witness for DW2

| | | | |
|---|---|---|---|
| Name : | அமுல் பெனடிட் | Caste : | - |
| Father's Name: | பி.டி.லாசர் | Calling : | - |
| Village : | கிருஸ்டியான் பேட்டை | Religion : | இந்து |
| Taluk : | - | Age : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 29 day of June, 2018.

Cross Examination

நான் தற்பொழுது கிருஸ்டியான் பேட்டையில் வசிக்கிறேன். நான் புனித அன்னம்மாள் மடத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிகிறேன். என்னுடைய வேலை யாரவது சொல்லும் வேலை செய்வது என்றால் ஆமாம். கணினி வேலையும் நான் பார்ப்பதுண்டு. நான் புனித அன்னம்மாள் மடத்தில் வேலை பார்ப்பதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அதுபோல் எந்த ஆவணங்களும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் என்னுடைய அடையாள அட்டையை கொடுத்துள்ளேன். நான் இந்த வழக்கில் சாட்சி சொல்ல எனக்கு எங்கள் மடத்தில் அனுமதி கடிதம் கொடுத்தார்களா என்றால் அதுபோல் இல்லை. நான் அந்த மடத்தில் 2010 முதல் தற்போது வரை 8 வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். 2010 வருடத்திற்கு முன்னதாக அந்த மடத்தில் என்ன நடந்தது, மற்றும் அந்த மடத்தின் நிர்வாகம் குறித்து என்ற விவரங்களும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மற்றவர்கள் சொல்வதை வைத்து தான் நான் சாட்சியம் அளிக்கிறேனா என்றால் இல்லை ஆவணங்களை படித்து பார்த்து தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். ஆவணங்கள் என்னுடைய கஷ்டடியில் உள்ளதா என்றால் ஆவணங்களை கையாளும் பொழுது நான் படித்து பார்த்துள்ளேன். மடத்தின் ஆவணங்களை கையாளும் அதிகாரம் எனக்கு உள்ளதா என்றால் உள்ளது. அதுபோல் அதிகாரம் உள்ளது என்பதை நிரூபிக்கும்

வகையில் நீதிமன்றத்தில் ஏதேனும் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இலலை. நான் அலுவலக உதவியாளராக பணிபுரிவதால் எனக்கு அதுபோல் அதிகாரம் இலலை என்றும் மற்றவர்கள் கூறியதை கேட்டு நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாணவாக்குமூலத்தில் நானே பார்த்ததின் அடிப்படையில் வாக்குமூலம் அளிப்பது போல் உள்ளது. அது எனது கற்பனை என்று கூறினால் சரியல்ல. என்னுடைய பிரமாணவாக்குமூலம் ஏற்புடையது அல்ல என்றால் சரியலல. நான் கேள்வியின் அடிப்படையில் சாட்சி சொல்வதால் ஏற்றுக் கொள்ள முடியாது என்றால் சரியல்ல. நான் பிறந்த தேதி 15.06.1976 ஆகும். மடத்தின் ஆவணங்கள் 1915 மற்றும் 1946 என்று என் பிரமாணவாக்குமூலத்தில் நான் கூறியுள்ளதால் நான் பிறப்பதற்கு முன்பாக உள்ள ஆவணங்களை பற்றி எனக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்று கூறினால் சரியல்ல. நான் ஆவணங்களை படித்து பார்த்து தெரிந்து கொண்டேன்.

(Sd/-)..V.Vannamalar
DISTRICT MUNSIF
KATPAD I.